6th February 1959]

(*b*) whether these tenders are invited annually or periodically?

THE HON. SRI M. A. MANICKAVELU (*a*) A statement [a] is placed on the table of the House.

(*b*) Annually.

SRI A. GAJAPATHY NAYAGAR : இந்த மூல மருந்துப் பொருள்களை வரவழைப்பதற்கு அந்தக் கல்லூரியின் தலைவர் (டீன்) மட்டும் பொறுப்பாளியா அல்லது யாருடைய யோசனையையாவது அவர் கேட்டுச் செய்ய வேண்டுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தப் பொறுப்பு டீனுடையதுதான். ஆனால் மற்றவர்களிடம் யோசனை பெறுவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.

SRI A. GAJAPATHY NAYAGAR : கல்லூரித் தோட்டத்திலேயே பயிராகும் மூல மருந்துப் பொருள்களைத் தவிர மற்றவற்றை வெளியிலிருந்து வாங்குகிறார்களா, அல்லது தோட்டத்தில் விளையக்கூடிய மருந்துப் பொருள்களையும் வெளியிலிருந்து வாங்குகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்தத் தோட்டத்திலே "ஹெர்பல் ப்ளான்டேஷன்" கிடைக்கக்கூடியதையெல்லாம் அதிலிருந்து எடுத்துக் கொண்டு, இல்லாததை வெளியிலிருந்து வாங்கவேண்டும். அங்கே இருப்பதையே வெளியில் வாங்குவது கூடாது.

SRI A. GAJAPATHY NAYAGAR : சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக வெளியிலிருந்து வாங்கும் மூல மருந்துப்பொருள்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன என்பதை அரசியலார் அறிவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது ஆராய்ச்சி அதிகமான அளவில் நடந்துகொண்டு வருகிறது. (சிரிப்பு)

Social and economic conditions of Nilgiris communities

*4 *Q.*—SRI V. V. RAMASWAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have formulated any scheme to improve the social and economic conditions of the Todas, Kotas and other Nilgiris communities living in the Nilgiris district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) A brief statement [b] is placed on the table of the House.

SRI V. V. RAMASWAMI : சென்ற ஆண்டு மே மாதம் 10-ம் தேதியன்று நமது கவர்னர் அவர்கள் உதகையில் பேசும்பொழுது, இந்த மலை ஜாதியினர்களுக்கு 175 ஏக்கர் நிலம் "அசைன்" பண்ணப்படும் என்று சொன்னதாகத் தெரிகிறது. கவர்னர் அவர்களே, அந்த நிலங்களை அவர்களே வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், மாற்றாருக்குக் கொடுக்கக் கூடாது என்றும் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு நிலம் கொடுக்கப்பட்டதா? அதை அவர்களே வைத்துக்கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கவர்னர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து அந்த ரிப்போர்ட்டை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

---

[a] Printed as Appendix III on pages 63–64 infra.
[b] Printed as Appendix IV on page 65 infra.

Sri V. M. SURENDRAM : முன்பு தோடர்கள் பூமி வைத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது பூமி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை அவர்களுக்குத் திருப்பி விநியோகம் செய்ய சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.

Sri V. M. SURENDRAM : மந்திரியாருடைய ஸ்டேட்மெண்டில் "Grant of financial assistance on half-loan and half-grant basis at Rs. 150 for millet and other cultivation". என்று இருக்கிறது. அந்தத் தோடர்களுக்கு உருளைக்கிழங்கு பயிரிட பூமி இல்லை. பூமி கொடுத்தால்தான் உற்பத்தி செய்யமுடியும். அவர்களுக்கு பூமி கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri P. KAKKAN : எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் நிலம் கொடுத்து வருகிறோம். நிலம் கொடுக்கப்பட்டவர்களுக்குத்தான் பயிரிட ரூபாய் கொடுக்கிறோம்.

Sri V. V. RAMASWAMI : சென்ற ஆண்டில் கவர்னர் உதகையில் பேசும்பொழுது "175 acres of land would be shortly assigned to the Thodas. We hope that the Thodas would make the best use of the land and bring them under cultivation." என்று கலெக்டர் அவர்கள் சொன்னதாக அறிவித்தார். அப்படிப் பேசி ஒரு ஆண்டு ஆகிவிட்டது. அதன் பிரகாரம் அவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டதா ? கொடுக்கப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri P. KAKKAN : இது சம்பந்தமாக நான் கவனித்துப் பதில் சொல்லுகிறேன்.

Sri G. KRISHNAMOORTHY : இப்பொழுது இந்தத் தோதவர்களைப் படம் பிடித்து 'இன்னும் இந்த மாதிரி நாகரீகத்தில் உள்ளவர்கள் இருக்கிறார்கள்' என்பதைக் காண்பிப்பதற்காகப் பத்திரிகைகளில் போடுகிறார்கள் அப்படிச் செய்யாமல் இருப்பதற்கு அரசாங்கம் வழி வகை செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Bulls supplied to Harijan agriculturists

* 5 *Q.*—Sri M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Public Works be pleased to place before the House a statement showing district-wise, the number of bulls, sewing machines, tools and implements supplied to Harijan agriculturists for the years 1956–57 and 1957–58?

The Hon. Sri P. KAKKAN : A statement* is placed on the table of the House.

Sri M. ETHIRAJALU : வாழ்க்கையிலே வசதியற்ற, பொருளாதாரத் துறையிலே முன்னேறாத, மிகவும் பின் தங்கிய சமூகத்திலுள்ள தொழிலாளர்களுக்கும் இவ்விதக் கருவிகளை வாங்கிக்கொடுக்க அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : இப்பொழுது ஹரிஜனங்களுக்கு மட்டும் தான் இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் இது பற்றிய தனி விவரங்கள் அறியவேண்டுமானால், தனிக் கேள்வி போடவேண்டும்.

---

* Printed as Appendix V on page 66 infra.